# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

### அ.சா. 8 (LW –20)

| **பெயர்** | சிவக்குமார் | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **31.07.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நிலக்கோட்டை வட்டம் நிலக்கோட்டை கிராமத்தில் VAOவாக பணிபுரிந்து வருகிறேன். 2018 ஆம் ஆண்டு நான் வத்தலகுண்டில் VAOவாக பணிபுரிந்து வந்தேன். 30.08.2018 அன்று காலை 06.30 மணிக்கு அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் இருந்த காவல் ஆய்வாளர் எனக்கு போன் மூலம் அழைத்தார். அப்போது வத்தலகுண்டில் குடியிருந்தேன். எனது உதவியாளர் பழைய வத்தலகுண்டுவில் குடியிருந்தார். ஆய்வாளர் என்னை போனில் அழைத்து வத்தலகுண்டு – பெரியகுளம் சாலையில் ஆம்பூர் பிரியாணி கடை அருகில் அஜித் குமார் என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக அம்மையநாயக்கனூர் காவல் நிலையம் கொண்டு செல்வதாகவும் சொன்னார். அதனால் நானும் எனது உதவியாரும் வத்தலகுண்டிவில் இருந்து புறப்பட்டு அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு காலை 09.00 மணிக்கு வந்து சேர்ந்தோம். எங்கள் முன்பாக அஜித்குமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் ஒரு கொலை சம்பவத்தை பற்றி சொன்னார். கத்தியை மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். தன்னை கூட்டி சென்றால் மறைத்து வைத்திருக்கும் கத்தியை எடுத்து தருவதாக சொன்னார். கத்தியானது மதுரை பழைய விளாங்குடி காலனி தெருவில் உள்ள தன் வீட்டின் ஆஸ்பெட்டாஸ் சீட்டின் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய பிறகு அங்கிருந்து புறப்பட்டு மதுரைக்கு பழைய விளாங்குடி காலனி தெருவில் உள்ள எதிரியின் வீட்டிற்கு போனோம். அங்கு போனவுடன் கத்தியை எடுத்துக்கொடுத்தார். அத்தாட்சி தயார் செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளரும், கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் அ.த.சா.ஆ.3 மற்றும் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.த.சா.ஆ.4 குறியிடப்படுகிறது.

அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் அ.த.சா.ஆ.5. என்னிடம் காட்டப்படும் 2 கத்திகளில் எந்த கத்தியை காட்டி ஆஜர் செய்தார் என்றால் அயிட்டம் எண்.2 என்று எழுதப்பட்டுள்ள கத்தியை சாட்சி அடையாளம் காட்டினார். அந்த கத்தி சா.பொ.1 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னை போனில் அழைத்தவரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் SI–ஆ Inspector–ஆ என்றால் அவர் Inspector ஆவார். எனக்கு காலை 06.00 மணிக்கு போன் வந்தது. நான் காலை 06.00 மணிக்கு தகவல் வந்த உடன் நானும், எனது உதவியாளரும் எதிரியை பிடித்து வைத்திருந்த ஆம்பூர் பிரியாணி கடை அருகில் போனோம். அதன் பிறகு எங்களை அம்மையநாயக்கனூர் காவல் நிலையம் வர சொல்லிவிட்டு காவல் ஆய்வாளர் காவல் நிலையம் சென்றுவிட்டார். நாங்கள் பைக்கில் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் வீட்டுக்கு போய் எங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகு புறப்பட்டு காலை 09.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். VAO கடமையும் அதிகாரமும் பற்றிய நூல் உள்ளது என்றால் சரிதான். அதன் படி நாங்கள் பணிபுரியும் இடத்தைவிட்டு வெளியூர் செல்லும் போது RI க்கு தகவல் கொடுத்துவிட்டு சொல்ல வேண்டும் என்றும், RI தலைமை இடத்து வட்டாச்சியருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று விதி இருப்பது எனக்கு தெரியும். அவ்வாறு வெளியூர் சென்றுவிட்டு வந்த பிறகு எந்த பணிக்கு சென்றேன் என்ற விபரத்தை எழுத்துபூர்வமாக அறிக்கையாக RI இடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவர் மேலதிகாரிக்கு தெரிவிப்பார் என்றால் சரிதான். மேற்படி விதிகளை நான் கடைபிடிக்கவில்லை என்றால் தவறு, RI க்கு தகவல் சொல்லிவிட்டு தான் சென்றேன். RI இடம் சொல்லிவிட்டு சென்றதாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றும், அதனால் நான் RI சொல்லாமல் வெளியூர் போய் வந்தேன் என்றால் தவறு. நான் சொல்வது போல் எதிரியானவர் என் முன்பாக ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிபடையில் சா.பொ.1 கைப்பற்றபடவில்லை என்றால் தவறு. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் தயார் செய்து வைத்த ஆவணங்களில் கையொப்பம் போட்டுக்கொடுத்து வந்தேன் என்றால் தவறு. அம்மையநாயக்கனூரில் VAO இருப்பதால் தங்களை சாட்சியாக ஏற்க தேடி வர வேண்டிய அவசியமில்லை என்றும், தாங்கள் போலிசாரின் பணிந்த கையிருப்பு சாட்சி என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

3 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாக 3 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.31 20:13:10 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.